முருகப்பெருமான் துணை

**மகான் மூர்க்க நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.03.2023**, திங்கட்கிழமை

1. வரமருளும் ஞான வள்ளலே
   வாழும் ஞானியே அரங்கனே
   சரவணச்சுடரேற்றி உலகில்
   சற்குருவாக அருளும் தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அனுகூல ஆசி
   ஆசிதனை சுபகிருது சேல்திங்கள்
   அறிவிக்க முன்னான்கோர் திகதி சோம வாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 14 ம் நாள், 27.03.2023, திங்கட்கிழமை)
3. வாரமதில் மூர்க்க நாயனாரும்
   வையகம் நலமுற உரைப்பேன்
   சோரமின்றி இயற்கை வளமும்
   சுபிட்சம் தரும் மழைவளமும் குன்றா
4. குன்றா வளமிக்க தேசமாக
   குருமார்கள் முன்நின்று வழிநடத்த
   நன்றான ஞான பூமியாக
   ஞானவான்கள் நிறைந்த வண்ணம்
5. வண்ணமுடன் நிலையை மாற்றும்
   வரம் தரும் அரங்கஞானி மேல்
   எண்ணம் சரணாகதியாகவே
   எல்லாமுமாகக் கொண்டு இணைந்திட
6. இணைந்திட பூரண மாற்றம்
   இவ்வுலகில் யாவர்க்கும் கண்டு
   துணைபட ஞான ஆட்சியும்
   துவங்கும்படி சக்தி பெருகி
7. பெருகியே உலக மாற்றம்
   பேராசான் வழிகாட்டலின்படி
   தருமமும் தயவும் பெருகிய
   தனிப்பெருங்கருணை நிறைந்த
8. நிறைந்த ஞானத் தலைமை
   நிலமதனில் ஞான ஆட்சியாக
   குறைவின்றி உலகம் அடைந்து
   குருவரங்கன் வழிகாட்டல் தன்னில்
9. தன்னிலே அற்புதம் கூடும்
   தகாத ஊழல் வஞ்சமிலா
   மண்ணை மக்களை சுரண்டும்
   மாபாதகச் செயல்களுமில்லா

10. இல்லாத வண்ணம் மாற்றம்
எல்லாத் துறையிலும் கண்டுமே
வல்லமையான வளர்ச்சி அடைந்து
வையகம் புதுமை அடையும்

11. அடையுமே ஞான ஆட்சியாக
ஆறுமுகனார் தலைமை ஏற்று
சோடையிலா சுபிட்சம் கூடும்
செப்பிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–